**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 315 நாள்: 22.07.2026

**சோழிங்கநல்லூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (22.07.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-194க்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் பகுதியில் உள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் மருத்துவர், பணியாளர்கள் வருகை, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை, படுக்கை மற்றும் கழிவறை வசதிகள் குறித்துப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, அப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மாடுகள் காப்பகம் மற்றும் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள மயானபூமியினையும், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு-200க்குட்பட்ட பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் நீர் வெளியேறும் பகுதியினையும் பார்வையிட்டு, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**